# “இறைவெளிப்பாடு” (Dei Verbum): இரண்டாம் வத்திக்கான் சங்க கோட்பாட்டின் வழியில் நம் வாழ்வும் இறைவார்த்தைப்பணியும்

**அருள்பணி ச. ஸ்தனிஸ்லாஸ்**
பொதுச்செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு

## 1. ஏட்டின் அறிமுகம்

- ❖ “இறைவெளிப்பாடு” என்ற இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் கோட்பாட்டு ஏடு “கடவுளின் வார்த்தை” (*Dei Verbum*) என்ற இலத்தின் வார்த்தைகளோடு தொடங்குவதால் அதுவே அவ்வேட்டுக்கு தலைப்பாயிற்று. தமிழில் “இறைவெளிப்பாடு”; இறைவார்த்தை பற்றியது.
- ❖ நான்கு கோட்பாட்டு ஏடுகளில் சிறியது.
- ❖ முதல் வரைவு – 1962 “இறைவெளிப்பாட்டின் ஆதாரங்கள்/ ஊற்றுக்கண்கள்”- தற்காப்பு மனநிலை.
- ❖ பல நிலைகளில் திருத்தங்களுக்குப் பிறகு அய்ந்தாவது (இறுதி) வரைவு- 18 நவம்பர் 1965- ல் 2350 பேரில் 2344 பேரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### பின்புலத்திலிருந்த ஆவணங்கள்:

- ❖ *திரிதெந்தின் சங்க* (1545-63), *ஆவணங்கள்-* திருநூல் தொகை (Canon) முடிவு செய்யப்பட்டது (73 புத்தகங்கள்); வுல்காத்தா இலத்தீன் மொழிபெயர்ப்பின் மேன்மை வலியுறுத்தப்பெற்றது.
- ❖ முதலாம் வத்திக்கான் சங்க (1869-1870) ஆவணங்கள்- திருநூல் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பெற்றது, இறைவனே அதன் ஆசிரியர் என்பதை வலியுறுத்தியது.
- ❖ “பராமரிக்கும் கடவுள்” (13ஆம் லியோ, *Providentissimus Deus*, 1893): நவீன சித்தாந்துக்கு எதிராக இருந்தாலும், புதிய பகுப்பாய்வு முறைகளைப் பொறுப்புணர்வோடு கையாண்டு அறிவியல் பூர்வமாக விவிலியத்திற்கு விளக்கம் கொடுக்க கத்தோலிக்க விவிலிய அறிஞர்களுக்கு ஊக்கம்.
- ❖ இறை ஆவி தூண்டுதலோடு (பயஸ் XII, *Divino Afflante Spiritu*, 1943):- வரலாற்றுப்பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தவும், மூல மொழிகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் விவிலிய அறிஞர்களுக்கு ஊக்கம்.
- ❖ புனித தாய்த்திரு அவை (*Sancta Mater Ecclesia*): நற்செய்தி நூல்களின் வறலாற்றுத்தன்மை; நர்செய்தி நூல்கள் உருவாக்கத்தின் மூன்று நிலைகள்: இயேசுவின் காலம், திருத்தூதர்களின் காலம், நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட காலம்.
- ❖ மேற்கோள் காட்டப்பட்டுள்ள திருஅவைத் தந்தையர்கள்: அகுஸ்தின், எரோனிமு, அம்புரோஸ், இரேனியு, யோவான் கிரிசோஸ்தோம், எருசலேம் நகர சிரில்)
- ❖ குறிப்பிடப்படும் சங்கங்கள்: நிசெயன் சங்கம், கொன்ஸ்தான்ஸ் நான்காவது சங்கம்
- ❖ திருத்தந்தையர்களின் போதனைகள்: பயஸ் XI, பெனெடிக்ட் XV.

### புதிய அணுகு முறை:

- ❖ தற்காப்பு யுக்திகள் கிடையாது; ஏற்றுக்கொள்ளாதவர்கள் பற்றிய கண்டன மொழிகள் இல்லை.
- ❖ திருவிவிலியத்தின் வழுவாமை பற்றிப் பேசுவதில்லை.
- ❖ கோட்பாடுகளை வலியுறுத்தும் மனநிலையைவிட அருள்பணிக் (Pastoral Approach) கண்ணோட்டம் மேலோங்கியிருக்கின்றது. சங்க நடவடிக்கைகள் அனைத்துக்கும் அக்கண்ணோட்டமே பின்புலத்தில் இருந்து வந்துள்ளது.

- ❖ இவ்வேடானது “ஒன்றிப்பு/ அகில உலக” (ecumenical) சங்கத்தால் (இரண்டாம் வத்திக்கான்) ஏற்றுக்கொள்ளப்பட்டு, திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டதால் இறைவெளிப்பாடு பொருத்தவரை திருஅவையின் ஆசிரியத்தின் மிக உயர்ந்த அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருக்கிறது. அதைத்தொடர்ந்து, திருவிவிலியம் சார்ந்த அனைத்து கருத்துக்கள் மீதும் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

**அமைப்பு:**

- ❖ முன்னுரை (எண் 1)
- ❖ இயல் 1 (எண்கள் 2-6): வெளிப்பாடு
- ❖ இயல் 2 (எண்கள் 7-10): வழிவழியாக வழங்கப்படும் இறை வெளிப்பாடு
- ❖ இயல் 3 (எண்கள் 11-13): விவிலியத்தின் இறை ஏவுதலும் அதன் பொருள் விளக்கமும்
- ❖ இயல் 4 (எண்கள் 14-16): பழைய ஏற்பாடு
- ❖ இயல் 5 (எண்கள் 17-20): புதிய ஏற்பாடு
- ❖ இயல் 6 (எண்கள் 21-26): திருச்சபையின் வாழ்வில் திருவிவிலியம்

## 2. “இறைவெளிப்பாடு” நமக்கு சொல்வது என்ன?

### முன்னுரை (எண் 1)

- ❖ கடவுளின் வார்த்தையானது இறைவெளிப்பாடு என்ற பறந்த தளத்தில் வைத்து விளக்கப்படுகிறது.
- ❖ நிறைவாழ்வின்/ மீட்பின் நற்செய்தியை உலகம் முழுவதும் பறைசாற்றுவதே திருச்சங்கத்தின் அருள்பணி (Pastoral Ministry) சார்ந்த நோக்கம் என்பதை 1 யோவா 1: 2-3 வசனங்களை மேற்கோள்காட்டி இவ்வேடு எடுத்துரைக்கிறது.
- ❖ இறைவார்த்தைக்கு முதலில் தான் மனமுவந்து செவி சாய்த்து அதை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்று திருஅவை உண்ர்ந்திருக்கிறது.
- ❖ இறைவார்த்தை பற்றிய கேள்விகளுக்கு ஆராய்ச்சிப்பூர்வமான பதில் தருவது இவ்வேட்டின் நோக்கம் அல்ல. அருள்பணிக் கண்ணோட்டத்தில் இறைவார்த்தை பற்றிய கோட்பாட்டை விளக்குவதே அதன் நோக்கம்.

### இயல் 1 (எண்கள் 2-6): வெளிப்பாடு

- ❖ இறைவன் வெளிப்படுத்துவது நம்பிக்கையாளர் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சில கோட்பாடுகள் அல்ல; தம்மையே வெளிப்படுத்துகிறார்.
- ❖ அடிப்படையில் அது கடவுளுக்கும் மனிதருக்குமிடையெ நிகழும் உறவுப்பரிமாற்றம். அது கடவுளையும், கிறிஸ்துவில் அரங்கேறிய மீட்புத்திட்டதையும் பற்றியது (எபே 1:9).
- ❖ மூவொரு கடவுளின் நட்புறவில் நாம் திளைக்கவேண்டும் என்பதே இறைத்திருவுளம் (இவெ, எண், 2). அதனால்தான் திருவிவிலியம் கடவுள் மனிதருக்கு எழுதிய காதல் கடிதம் என்பார் புனித ஜாண் கிரிசோஸ்தம்.
- ❖ தம் பேரன்பின் மிகுதியால் மனிதரை தம் நண்பர்களென்று உறவு கொண்டாடுகின்றார் (விப 33:11; யோவா 15:14-15). மனிதரோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள விழைகிறார் இறைவன்; நம்மோடு குடிகொள்கிறார் (பாரூக் 3:38; யோவா 1:14). மனிதர் அனைவரும் தம்மை வந்தடைய வேண்டும், தம் இறை இயல்பில் பங்கு பெறவேண்டும் என்பதே வானகத்தந்தையின் பேராவல் (எபே 2:18; 2 பேது 1: 4).

- படைப்பு முழுவதுமே இறைவனின் வெளிப்பாட்டுத்தளமாக அமைந்துள்ளது. எனவே இயற்கையைப்பார்த்து பகுத்தறிவைப் பயன்படுத்தி படைத்தவரை நம்மால் அறிந்துகொள்ளமுடியும் (உரோ 1:20; "இறைவெளிப்பாடு," எண் 3, 6). கடவுளை வெளிப்படுத்தும் புத்தகமாக இயற்கையை வர்ணிக்கிறார் திருத்தந்தை 16ஆம் பெனெடிக்ட் (*ஆண்டவரின் வார்த்தை*, எண் 7).
- வெளிப்பட்டின் வித்துகள் பிற கலாச்சார, சமய மரபுகளிலும் மறைந்திருக்கின்றன ("திருச்சபையின் நற்செய்திப் பணி," எண் 11).
- மேலும், மனித அறிவுக்கு எட்டாத இறைச்செல்வங்களையும் கடவுள் மனிதரோடு பகிர்ந்துகொள்கிறார் (இவெ, எண் 6).
- மனிதரோடு உரையாடி, உறவாடி தம்மை வெளிப்படுத்தும் இறைவனுக்கு நாம் தரக்கூடிய மிகச்சிறந்த பதில் அவரில் நம்பிக்கை கொண்டு அவருக்குக் கீழ்ப்படிவதே (உரோ 16:26; காண் உரோ 1:5; 2 கொரி 10:5-6).

**இயல் 2 (எண்கள் 7-10): வழி வழியாக வழங்கப்படும் இறைவெளிப்பாடு**

- கிறிஸ்துவின் வாய்மொழிப்போதனை, வல்ல செயல்கள், அவரோடு வாழ்ந்த வாழ்க்கை ஆகியவற்றின் வழியாகவும் தூய ஆவியின் தூண்டுதலாலும் தாங்கள் கற்ற மீட்பின் நற்செய்தியை திருத்தூதர்கள் தம் வாய்மொழிப் போதனை, வாழ்வின் எடுத்துக்காட்டுகள், ஏற்படுத்திய அமைப்புகள் ஆகியவற்றின் வாயிலாக வழிவழியாக வழங்கினர். திருத்தூதர்களும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த பிறரும் ஆவியின் ஏவுதலினால் எழுத்தில் வடித்துத் தந்தனர் (இவெ, எண் 7).
- நற்செய்தி நூல்கள் எழுத்து வடிவம் பெற்ற பின்னும் எழுதப்படாத செய்திகள் ஏராளமாய் வாய்மொழியாகப் பரவிவந்தன (யோவா 20:30; 21:25).
- வாய்மொழியாகவோ எழுதப்பட்ட வார்த்தை வழியாகவோ தாங்கள் கற்றுக்கொண்ட மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் (காண் 1 தெச 2:12). தாங்கள் பெற்றுக்கொண்ட நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டுமென்றும் (காண். யூதா 3) திருத்தூதர்கள் கிறித்தவர்களை அறிவுறுத்தினர்.
- திருஅவை தன் படிப்பினை, வாழ்வு, திருவழிபாடு வழியாகத் தான் பெற்றுக்கொண்ட நற்செய்தியை பகிர்ந்து வருகிறது. (காண். இவெ**,** எண் 8).
- திருமரபும் திருவிவிலியமும் நெருங்கிய பிணைப்பும் தொடர்பும் கொண்டவை. இரண்டும் இறைவனிடமிருந்தே வருகின்றன. ஒரே குறிக்கோளை நாடிச் செல்கின்றன.
- மரபின் வழியாகத்தான் விவிலியத் திருமுறை (Canon of the Bible) நமக்குக் கிடைத்திருக்கின்றது.
- திருவிவிலியத்தைப் பொருள் கொள்வதற்கும் மரபு தேவை. திருஅவைத் தந்தையர்களின் போதனைகளையும், கீழை (கிரேக்க) – மேலச் (இலத்தீன்) சபைகளின் வழிபாட்டு முறைகளையும் கற்பது அவசியமாகிறது (இவெ**,**எண் 8, 23).
- எனவே திருமரபையும் திருவிவிலியத்தையும் சமமாக வைத்துப் போற்ற திரு அவை அழைக்கிறது (இவெ**,** எண் 9).
- இப்பின்புலத்தில், "திருவிவிலியம் மட்டுமே போதுமானது" (*Sola Scriptura*) என்ற கூற்று ஏற்கத்தக்கதா?

- ❖ எழுதப்பட்ட அல்லது மரபு வழி வந்த கடவுளின் வார்த்தைக்கு அதிகாரப் பூர்வமான விளக்கம் கொடுக்கும் பொறுப்பு திரு அவையின் உயிருள்ள ஆசிரியத்திடம் (Magisterium) ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ❖ இருப்பினும், திரு அவையின் ஆசிரியம் இறைவார்த்தையின் பணியாள் மட்டுமே.
- ❖ திருமரபும் திருவிவிலியமும், திருஅவையின் ஆசிரியமும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. (இவெ, எண் 10).

**இயல் 3 (எண்கள் 11-13): விவிலியத்தின் இறை ஏவுதலும் அதன் பொருள் விளக்கமும்**

- ❖ பழைய, புதிய ஏற்பாட்டு நூல்கள் யாவும், அவற்றின் எல்லாப் பாகங்களும் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டுள்ளவை (2 திமோ 3:16; 2 பேது 1:19-21; 3:16-16).
- ❖ ஏவுதல் என்பதன் பொருள்: "கட்டளையிடுதல்; தூண்டிவிடுதல்; செலுத்துதல்; சொல்லுதல்; அனுப்புதல்"
- ❖ இறை + ஏவுதல் = இறைவனுடைய/ தூய ஆவியின் ஏவுதல்.

**தவறான விளக்கங்கள்**

- ❖ கடவுள் சொல்லச் சொல்ல விவிலிய நூல் ஆசிரியர் எழுதினார்.
- ❖ கடவுளால் ஆட்கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் சுய உணர்வு மறந்து, மயக்க நிலையில் எழுதினார்கள்.
- ❖ விவிலிய ஆசிரியர்கள் தவறான செய்திகளை எழுதுவதிலிருந்து கடவுள் காத்தார்.
- ❖ விவிலியம் வானகத்திலிருந்து நேரடியாக மண்ணகம் வந்தது.
- ❖ விவிலியம் முழுக்க முழுக்க மனிதப் படைப்பே; திருச்சபை அங்கீகரிப்பதால் மட்டுமே அது கடவுளால் ஏவப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**அரைகுறையான விளக்கங்கள்:**

- ❖ 1. இறைவன் கருத்துக்களைக் (Ideas) கொடுத்தார். திரு ஆசிரியர் தகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி திருநூலை எழுதினார் (கர்தினால் பிரான்சலின்)
- ❖ 2. ஒரு சிலர்: மீட்பின் மறை உண்மைகள் மட்டும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை.
- ❖ 3. இறை ஏவுதல் திருச்சபைக்கு கொடுக்கப்பட்ட வரம் (மெக்கென்சீ).

**எப்படிப் புரிந்து கொள்வது?**

- ❖ விவிலியத்திற்கு கடவுளும் ஆசிரியர்; மனிதரும் ஆசிரியர்
- ❖ விவிலிய நூல்களை உருவாக்கக் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் முழு சுதந்ததிரத்துடன், சுய நினைவோடு தங்கள் திறமையையும் வல்லமையையும் பயன்படுத்தினார்கள் ((2 மக் 2:24-33; 15:38; லூக் 1:1-4; 1 கொரி 1:14- 16). . கடவுளே அவர்களில், அவர்கள் வழியே செயலாற்றி தாம் விரும்பிய எல்லாவற்றையும், அவற்றை மட்டுமே எழுத்தில் வடிக்குமாறு கடவுள் அவர்களைப் பயன்படுத்தினார்.
- ❖ வார்த்தையானவர் பலவீனம் நிறைந்த மனித உடலை ஏற்று மனிதனைப் போல் இருந்தார். அதே போன்று மனிதனின் மொழியில் வெளியிடப்பட்ட இறைவனின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன. "விவிலியம் மனித வார்த்தையில் வெளிப்படுகின்ற இறைவார்த்தை" (இவெ, எண் 13).

- கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு நாம் நிலை வாழ்வு / மீட்பு பெறும்படியாக மீட்பின் நற்செய்தியை அறிவிப்பதே திருவிவிலியத்தின் நோக்கம் (காண். யோவா 20:31). உலகு பற்றியும், வரலாறு பற்றியும், அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் கொள்கைகள் பற்றியும் துல்லியமான தகவல்களை வழங்குவது விவிலியத்தின் நோக்கம் அல்ல (புனித அகுஸ்தின்).

### 3. சில பரிந்துரைகள்

- திருவிவிலியத்தை வாசிக்கின்றபொழுது, கடவுள் நம்மோடு உரையாடுகின்றார், உறவாடுகின்றார். அவருக்குச் செவி கொடுக்கவேண்டும். அவரோடு பேசவேண்டும். அவரோடுள்ள உறவிலே வளரவேண்டும்.
- **திருவழிபாட்டில்**: இறைவார்த்தையைக் கொண்டாடுவது, அதனால் ஊட்டம் பெறுவது; உரிய தயாரிப்பு- வாசகர்க்கு பயிற்சி; பதிலுரைப்படலைப் பயன்படுத்துவது.
- **அருளடையாளக் கொண்டாட்டங்களில்** இறைவார்த்தைக்குரிய முக்கியத்துவம் கொடுப்பது.
- இறைவார்த்தையின் அடிப்படையில் அமைந்த மறைக்கல்வி
- **பங்கில்** தன்னார்வலர்கள் பங்கு அருள்பணியாளரின் ஆதரவோடு குழுவாக சேர்ந்து விவிலியம் சார்ந்த பணிகளை முன்னெடுப்பது
- **அன்பியங்களில்**: அருள்வாக்கு வாசிப்பு (*Lectio Divina*)- வாசிப்பு, தியானம், இறை வேண்டல், காட்சித்தியானம், செயல்.
- **குடும்பத்தில்**: செபத்தில் தவிர்க்கமுடியாத அங்கம் இறைவார்த்தை வாசிப்பு, இறைவார்த்தையைக் கற்றல். வாரம் ஒரு முறை (ஞாயிறு) 10 நிமிடங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒன்றாக அமர்ந்து ஒருவர் பின் ஒருவராக விவிலியத்தை வாசித்து, அதனடிப்படையில் இறைவேண்டல் செய்வது. சோதனை மிகுந்த நேரங்களில் நம்மைத் தேற்றுவது இறைவார்த்தை (*ஆண்டவரின் வார்த்தை*, எண் 84-85).
- கத்தோலிக்க மாத/ வார இதழ் வாங்கி எலலாரும் பயன்பெறுவது

**தனிப்பட்ட வாழ்வில்:**

- தொடர் விவிலிய வாசிப்பு (தினமும் 10 நிமிடங்கள்). மனதைத்தொட்ட வசனங்கள், கேள்விகள், சந்தேகங்களைக் குறித்து வைத்து நண்பர்களோடு வாரம் ஒரு முறை பகிர்ந்து கொள்வது. (அருள்பணி A. S. அந்தோணிசாமி, “விவிலிய நண்பர்கள்”).
- கைப்பேசியில் விவிலியத்தை (வரி வடிவம்/ ஒலி வடிவம்) பதிவிரக்கம் செய்து பயணம் செய்யும் போதும் வாசிப்பது. கையில் புதிய ஏற்படாவது எப்போதும் எடுத்துச்செல்வது (திருத்தந்தை பிரான்சிஸ்).
- விவிலியம் சார்ந்த செயலிகளைத் தேடிப் பதிவிரக்கம் செய்து பயன்பெறுவது.
- நேரடி, இணையவழி விவிலிய வகுப்புகளில் இணைந்து விவிலியத்தைக் கற்பது. இணையவழி தொடர் விவிலிய வாசிப்பு, போட்டிகளில் பங்கேற்பது.
- வாரத்திற்கு ஒரு செயல் திட்டம்.
- விவிலியம் கற்பிக்கும் விழுமியங்களின் அடிப்படையிலான வாழ்வு வாழ்வதன் வழியாக விவிலியக் கலாச்சாரத்தை உருவாக்குவது.